## 28. DEVOLUTION OF POWERS

**28.42 உயர்நிலைக் குழு அறிக்கை –ஆதிதிராவிடர்/ மலைவாழ் மக்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.**

---

ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதிந–1) துறை

அரசாணை (3டி) எண்.1

நாள் : 4.1.2000

படிக்க :

அரசாணை நிலை எண்.73, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12.4.99.

**ஆணை**

இந்திய அரசியலைப்புச் சட்டம், அட்டவணை 2–ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருள்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி, படிப்படியாக மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள், சிறுபாசனம், சிறுகாடுகள் மற்றும் வன உற்பத்திப் பொருட்கள் பாதுகாப்பு ஆகியவற்றை தவிர பிற இனங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறப்பினர்களாகக் கொண்டும் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.99 அன்று அளித்தது.

2. உயர்நிலைக் குழுவின் அறிக்கையில், இயல் IIல் பரிந்துரை எண்.63 பின்வருமாறு:–

**பரிந்துரை எண். 63**

''ஆதிதிராவிடர் / மலைவாழ் மக்கள் மற்றும் பெண்கள் போன்ற நலிவுற்றோரின் மேம்பாட்டிற்கென உள்ளூர் வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த 'ஒருமுகப்படுத்தப்பட்ட' வளர்ச்சி நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்''.

3. உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவை குழுக் கூட்டத்தில் இப்பரிந்துரை குறித்து கீழ்க்கண்டவாறு ஏற்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

''ஆதிதிராவிடர் / மலைவாழ் மக்கள் மற்றும் பெண்கள் போன்ற நலிவுற்றோருக்கான மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படும் ''.

4. மேற்குறித்த குழுவின் பரிந்துரை எண். 63 குறித்து மேலே படிக்கப்பட்ட ஆணையில் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

''ஆதிதிராவிடர் / மலைவாழ் மக்கள் மற்றும் பெண்கள் போன்ற நலிவுற்றோருக்கான மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் ஏற்பாடுகள் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்''.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரசு செயலாளர்